**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

***(14.04.2015 முதல் 18.04.2015)***

***அறிக்கை எண் 28/2015*** ***தேதி: 13.04.2015***

***மாநிலத்தின் கடந்த வார வானிலை***

*தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 40°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செஆகவும் பதிவானது. இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 29°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் வறண்ட வானிலையே காணப்பட்டது.*

***எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (14.04.2015 முதல் 18.04.2015)***

*வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 68 முதல் 92 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 முதல் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11 கி.மீ முதல் 12 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.*

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14.04.15 | 0 | 35 | 25 | 5 | 68 | 45 | 12 | தென் மேற்கு |
| 15.04.15 | 12 | 35 | 25 | 5 | 68 | 45 | 12 | தென் மேற்கு |
| 16.04.15 | 12 | 33 | 23 | 8 | 92 | 80 | 11 | கிழக்கு |
| 17.04.15 | 12 | 33 | 23 | 8 | 92 | 80 | 11 | தென் மேற்கு |
| 18.04.15 | 10 | 33 | 23 | 8 | 92 | 80 | 11 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடை மழையை சேமிக்கும் வகையில் சரிவுக்கு குறுக்காக கோடை உழவு செய்யவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் எள் பயிரடப்பட்ட வயலில் மழை தண்ணீர் வடிய வடிகால் வசதி செய்யவும். மேலும் பருத்திக்கு நல்ல வடிகால் வசதி செய்வதன் மூலம் சப்பைகள் கீழே உதிர்வதை தடுக்கலாம்.
- ✓ மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் எல்லா இறவை பயிர்களுக்கும் குறிப்பாக தாழ்வான பகுதிகளில் தக்க வடிகால் வசதி செய்யவும்.
- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை கம்பு விதைப்பை மேற்கொள்ளலாம். மேலும் விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு கடினப்படுத்தி (விதைகளை 16 மணி நேரம் ஊரவைத்து, 5 மணி நேரம் நிழலில் உலர்த்தவும்) விதைக்கவும்.
- ✓ கோடை காலங்களில் பெறப்படும் மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். எனவே கால் நடைகளை மழை நேரங்களில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் கால் நடை மற்றும் கோழி கூடாரங்களின் அருகில் தண்ணீர் தேங்காமல் வடிகால் வசதி செய்வதன் மூலம் கொசு இனப்பெருக்கத்தை தடுக்கலாம்.

**குறுஞ்செய்தி**

- ✓ கோடை மழையை சேமிக்கும் வகையில் சரிவுக்கு குறுக்காக கோடை உழவு செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**